## கல்வி, சமுதாய சீர்திருத்தங்கள்

## 12th History Lesson 8 Questions in Tamil - Old Book

1. ஆங்கிலேயர் கீழ்க்கண்ட எந்த போரின் மூலம் வங்காளத்தை கைப்பற்றினர்?

**A) பிளாசிப்போர், 1757**

B) பக்சார் போர், 1784

C) கர்நாடகப் போர், 1846

D) வந்தவாசி போர், 1860

**விளக்கம்: 1757ல் ஆங்கிலேயர் வங்காளத்தைக் கைப்பற்றியபோதும், கல்வியைப் புகட்டும் பொறுப்பு இந்தியர்களிடமே இருந்தது. அரபி, பாரசீகம், வடமொழி ஆகியவற்றில் எழுதப்பட்ட நூல்களே கற்பிக்கப்பட்டு வந்தன.**

2. வாரன் ஹேஸ்டிங்ஸ் கல்கத்தாவில் ஒரு மதரஸாவை நிறுவிய ஆண்டு___________

A) 1780

**B) 1781**

C) 1784

D) 1785

**விளக்கம்: 1781ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் கல்கத்தாவில் ஒரு மதரஸாவை நிறுவி அங்கு அரபி, பாரசீக மொழிகள் உட்பட முஸ்லீம் சட்டங்கள் கற்பிக்கப்படுவதை ஊக்குவித்தார்.**

3. பிரிட்டிஷ் தூதுவரான ஜோனாதன் டங்கன் என்பவரது சீரிய முயற்சியால் காசியில் ஒரு வடமொழி கல்லூரி நிறுவப்பட்ட ஆண்டு___________

A) 1790

**B) 1791**

C) 1794

D) 1793

**விளக்கம்: பத்தாண்டுகளுக்குப் பிறகு 1791ல் பிரிட்டிஷ் தூதுவரான ஜோனாதன் டங்கன் என்பவரது சீரிய முயற்சியால் காசியில் ஒரு வடமொழிக் கல்லூரி நிறுவப்பட்டது. இங்கு, இந்துச் சட்டங்கள் மற்றும் தத்துவம் போன்றவை கற்பிக்கப்பட்டன.**

4. அரசாங்க மற்றும் திருச்சபை ஆவணங்களின் குறிப்பின்படி வங்காளத்தில் செயல்பட்டுவந்த பாரம்பரிய கல்விக்கூடங்களின் எண்ணிக்கை__________

A) 40,000

B) 50,000

C) 60,000

**D) 80,000**

**விளக்கம்: வங்காளத்தில் மட்டும் ஏறத்தாழ 80,000 பாரம்பரிய கல்விக்கூடங்கள் செயல்பட்டு வந்ததாக அரசாங்க மற்றும் திருச்சபை ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. அதாவது, அந்த மகாணத்தில் மட்டும் குறைந்தபட்சம் 400 பேருக்கு ஒரு கல்விச்சாலை என்ற விகிதத்தில் செயல்பட்டன.**

5. 1813ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின்படி இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்கென ஆண்டுக்கு ஒதுக்கபட்ட தொகை__________ஆகும்.

A) ஒன்றரை லட்சம்

**B) ஒரு லட்சம்**

C) இரண்டு லட்சம்

D) ஒன்பது லட்சம்

**விளக்கம்: 1813 ஆம் ஆண்டு பட்டயச்சட்டம் இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்கென அரசு ஆண்டுக்கு ஒரு லட்சம் ஒதுக்க வகை செய்தது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இச்சட்டம் இயற்றப்பட்டபோதே இது குறித்து நீண்ட விவாதம் நடைபெற்றது. சட்டம் இயற்றப்பட்டு இருபது ஆண்டுகள் ஆகியும் இது குறித்த புதிய விவாதங்கள் தோன்றிக்கொண்டே இருந்தன.**

6. கீழ்க்கண்ட கருத்துக்களில் சரியானவற்றைத் கண்டறி:

1. பிரிட்டிஷ் ஆட்சிகாலத்தில் அறிஞர்கள், இந்தியாவில் கல்வி வளர்ச்சி குறித்து இருவேறு கருத்துக்களை கொண்டிருந்தனர்.

2. கீழ்த்திசைவாதிகள் என்றழைக்கப்பட்ட குழுவினர் இந்திய மொழிகளும் கீழ்த்திசை பாடங்களும் வளர்க்கப்பட வேண்டும் என வாதிட்டனர்.

3. மற்றொரு பிரிவினரான, ஆங்கிலவாதிகள் மேலை நாட்டு அறிவியலும் இலக்கியமும் ஆங்கில மொழிவழி கற்பிக்கப்பட வேண்டும் என்று கூறினர்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) 3 மட்டும் சரி

**D) அனைத்தும் சரி**

7. வில்லியம் பெண்டிங் பிரபு தலைமை ஆளுநராக பதவியேற்ற ஆண்டு___________ஆகும்.

A) 1803

B) 1817

C) 1819

**D) 1829**

**விளக்கம்: 1829ல் தலைமை ஆளுநராக பதவியேற்ற வில்லியம் பெண்டிங் பிரபு இந்தியாவில் ஆங்கில மொழி வழிக்கல்வி வேண்டும் என வலியுறுத்தினார்.**

8. 1835 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்த கல்விக் குழுவில் இடம்பெற்றிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை___________ஆகும்.

A) ஐந்து

B) எட்டு

**C) பத்து**

D) ஒன்பது

**விளக்கம்: 1835 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கல்விக் குழுவில் இடம் பெற்றிருந்த 10 உறுப்பினர்களும் இருவேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர்.**

9. 1835ல் தொடங்கப்பட்ட மெக்காலே கல்விக் குறித்த தகவல்களுல் பொருந்தாததைக் கண்டறி:

1. இக்குழுவில் 10 உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர்.

2. குழுவின் தலைவர் மெக்காலேபிரபு உள்ளிட்ட ஐந்து பேரும் கீழ்த்திசை மொழிகளுக்காக வாதாடினர்.

3. எஞ்சிய ஐந்து பேரும் ஆங்கில மொழி வழிக்கல்வியை ஆதரித்தனர்.

A) 1 2 மட்டும் தவறு

**B) 2 3 மட்டும் தவறு**

C) 1 3 மட்டும் தவறு

D) அனைத்தும் தவறு

**விளக்கம்: குழுவின் தலைவர் மெக்காலேபிரபு உள்ளிட்ட ஐந்து பேரும் ஆங்கில மொழி வழிக்கல்வியை ஆதரித்தனர். எஞ்சிய ஐந்து பேர் கீழ்த்திசை மொழிகளுக்காக வாதாடினர்.**

10. மெக்காலே கல்விக் குழு குறித்த தீர்மானத்தை நிறைவேற்றிய ஆளுநர்___________ஆவார்.

A) கானிங் பிரபு

B) மிண்டோ பிரபு

**C) வில்லியம் பெண்டிங் பிரபு**

D) ஹேஸ்டிங்ஸ் பிரபு

**விளக்கம்: மெக்காலே பிரபு ஆங்கில வழிக்கல்வி குறித்து ஆதரித்த தனது புகழ்வெற்ற குறிப்பை அறிவித்தார். பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புகளையும் மீறி 1835 மார்ச் 7 ஆம் நாள் பெண்டிங் பிரபு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். இந்த தீர்மானத்தின்படி, இனிமேல் மேலை நாட்டு அறிவியல் மற்றும் இலக்கியங்களை ஆங்கிலமொழி வழியில் பயிற்றுவிப்பதற்கே அரசு நிதி செலவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது.**

11. சர் சார்லஸ் வுட் கல்விக் குழு குறித்த கருத்துக்களில் பொருந்தாததைக் கண்டறி:

1. சர் சார்லஸ் வுட் கல்விக் கொள்கையின்படி ஐந்து மாகாணங்களிலும் கல்வித்துறை நிறுவப்பட்டது.

2. இதன்படி தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காக மாணிய உதவி அளிப்பதற்கான திட்டமும் பரிந்துரைக்கப்பட்டது.

3. இக்கொள்கை தொழிற்கல்வி, ஆசிரியர் பயிற்சி மற்றும் பெண் கல்வி ஆகியவற்றுக்கான பள்ளிகளை நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவில்லை.

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

**C) 3 மட்டும் தவறு**

D) அனைத்தும் சரி

**விளக்கம்: இக்கொள்கை தொழிற்கல்வி, ஆசிரியர் பயிற்சி மற்றும் பெண் கல்வி ஆகியவற்றுக்கான பள்ளிகளை நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது.**

12. லண்டன் பல்கலைகழத்தின் மாதிரியை பின்பற்றி அமைக்கப்பட்ட பல்கலைகழகங்களுல் பொருந்தாததைக் கண்டறி.

A) கல்கத்தா

B) பம்பாய்

C) சென்னை

**D) ஆந்திரா**

**விளக்கம்: கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய மூன்று மாகாணங்களிலும் லண்டன் பல்கலைக்கழகத்தை அடியொற்றி தலா ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என்றும் கூறியது. இவற்றின் பலனாக, அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தியக் கல்வி விரைவாக மேலை நாட்டுமயமாக்கப்பட்டது.**

13. பிரிட்டிஷ் காலத்தில் மேலை நாட்டு கருத்துக்களும், கல்வியும்___________மூலமாக சென்றடைந்து பொது மக்களிடையே போதிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

**A) செய்தித்தாள்**

B) தொலைக்காட்சி

C) அஞ்சல்துறை

D) போக்குவரத்து

**விளக்கம்: மேலை நாட்டு கருத்துக்களும் கல்வியும் செய்தித்தாள்கள் மூலமாக சென்றடைந்து பொது மக்களிடையே போதிய தாக்கத்தை ஏற்படுத்தியது. வில்லியம் பெண்டிங் பிரபு போன்ற ஒரு சில பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும் தங்களது தனிப்பட்ட கவனத்தை இதில் செலுத்தினர். குறிப்பாக, பெண் விடுதலை குறித்தும் ஜாதிப்பாகுபாடு குறித்தும் சட்டங்கள் இயற்றப்பட்டன.**

14. சதி ஒழிப்பு குறித்தச் சட்டம் கீழ்க்கண்ட யாருடைய காலத்தில் இயற்றப்பட்டது.

A) மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ்

B) வாரன் ஹேஸ்டிங்ஸ்

**C) வில்லியம் பெண்டிங் பிரபு**

D) கானிங் பிரபு

15. கீழ்க்கண்டவர்களுல் பெண் சிசுக்கொலை குறித்து விளக்கமாக ஆய்வு செய்தவர்___________ஆவார்.

A) கர்னல் டாட்

B) ஜான்சன் டன்கன்

C) மால்கம்

**D) மேற்கண்ட அனைவரும்**

**விளக்கம்: 19ஆம் நூற்றாண்டின் பின் இந்திய சமுதாயத்தை உலுக்கிய பிரச்சனை மனிதாபிமானமற்ற கொடும் செயலான பெண்சிசுக் கொலையாகும். ராஜபுதனம், பஞ்சாப், வடமேற்கு மாகாணங்களில் இது பரவலாக காணபப்ட்டது. கர்னல் டாட், ஜான்சன் டன்கன், மால்கம் போன்ற பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பெண் சிசுக்கொலை குறித்து விளக்கமாக ஆய்வு செய்தனர்.**

16. பெண் சிசுக்கொலை வழக்கத்தை தடை செய்வது குறித்து சட்டங்கள் இயற்றப்பட்ட ஆண்டுகளில் பொருந்தாதது?

A) 1795

**B) 1800**

C) 1802

D) 1804

**விளக்கம்: பெண் குழந்தைகள் பிறந்த உடனேயே, அபினியை விழுங்கச் செய்தல், கழுத்தை நெரித்தல், வேண்டுமென்றே ஒதுக்குதல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு அவற்றை கொன்றனர். 1795, 1802, 1804 பின்னர் 1870 ஆகிய ஆண்டுகளில் இந்த வழக்கத்தை தடை செய்து சில சட்டங்கள் இயற்றப்பட்டன.**

17. 1856 ஜீலையில் விதவை மறுமணம் குறித்த சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியவர்___________ஆவார்.

**A) ஜே.பி. கிராண்ட்**

B) கர்னல் டாட்

C) ஜான்சன் டன்கன்

D) மால்கம்

**விளக்கம்: 1856 ஜீலையில் தலைமை ஆளுநர் ஆலோசனைக்குழு உறுப்பினரான ஜே.பி. கிராண்ட் என்பவர் விதவை மறுமணம் குறித்த சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தினார். 1856 ஜீலை 13ம் நாள் இது நிறைவேற்றப்பட்டது. 1856 ஆம் ஆண்டு விதவை மறுமணச் சட்டம் என்று இது அழைக்கப்பட்டது.**

18. பொருத்துக:

A) மெக்காலே கல்விக் குழு – 1. 1854

B) சர் சார்லஸ் வுட் கல்வி குழு – 2. 1856

C) விதவை மறுமணச் சட்டம் – 3. 1870

D) இந்திய சீர்திருத்தக்கழகம் – 4. 1835

A) 1 2 3 4

B) 2 1 4 3

**C) 4 1 2 3**

D) 3 2 1 4

**விளக்கம்:**

**A) மெக்காலே கல்விக் குழு – 1. 1835**

**B) சர் சார்லஸ் வுட் கல்வி குழு – 2. 1854**

**C) விதவை மறுமணச் சட்டம் – 3. 1856**

**D) இந்திய சீர்திருத்தக்கழகம் – 4. 1870**

19. "மசாபாப் பாலவிவாகம்" என்ற இதழை தொடங்கியவர்_________ஆவார்.

**A) பி.எம். மலபாரி**

B) கே.கே. பிள்ளை

C) அருந்ததிராய்

D) பாபா சாஹேப்

**விளக்கம்: 'மசாபாப் பாலவிவாகம்' என்ற இதழை பி.எம். மலபாரி என்பவர் குழந்தை மணத்துக்கு எதிராகப் போராடினார்.**

20. இந்திய சீர்திருத்தகழகத்தை தோற்றுவித்தவர்____________ஆவார்.

A) ஈஷ்வரசந்திர வித்யாசாகர்

B) ராஜாராம் மோகன்ராய்

**C) கேசவ சந்திர சென்**

D) மேற்கண்ட எவருமில்லை

21. கீழ்க்கண்ட இணைகளில் பொருந்தாதது எது.

A) 1846ல் பெண்ணின் திருமணத்துக்கான குறைந்தபட்ச வயது – 10

B) 1891ல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி பெண்ணின் திருமணத்துக்கான குறைந்த பட்ச வயது – 12

**C) 1930ல் ஆண்டு சாரதா சட்டப்படி குறைந்தபட்ச வயது – 16**

D) இந்திய விடுதலைக்குப்பிறகு திருமண வயது 14லிருந்து 18 ஆக உயர்த்தப்பட்டது.

**விளக்கம்: 1930 ஆண்டு சாரதா சட்டப்படி குறைந்தபட்ச வயது 14 ஆக உயர்த்தப்பட்டது.**

22. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானதைக் கண்டறி:

1. 19ஆம் நூற்றாண்டு சமூக, சமய சீர்திருத்த இயக்கங்களில் தீண்டாமை ஒழிப்பும் முக்கிய பிரச்சனையாக முன்னிறுத்தப்பட்டது.

2. மகாத்மா காந்தி தனது அபிவிருத்தி திட்டத்தில் தீண்டாமை ஒழிப்பையும் ஒரு பகுதியாக சேர்த்திருந்தார்.

3. 'ஹரிஜன்' என்ற செய்தி ஏட்டை நடத்திய அவர் 'ஹரிஜன் சேவக் சங்' என்ற அமைப்பையும் ஏற்படுத்தினார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) 3 மட்டும் சரி

**D) அனைத்தும் சரி**

23. டாக்டர் அம்பேத்கார் 1924ல் 'பகிஷ்கிரிட் ஹிட்காரினி சபை' என்ற அமைப்பை____________ல் உருவாக்கினார்.

A) சென்னை

**B) பம்பாய்**

C) கல்கத்தா

D) இரத்தினகிரி

**விளக்கம்: டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர் தனது வாழ்நாள் முழுவதையும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவே அர்ப்பணித்தார். இதற்காக, அவர் 1924ம் பம்பாயில் "பகிஷ்கிரிட் ஹிட்காரினி சபை" என்ற அமைப்பை உருவாக்கினார்.**

24. பொருத்துக:

A) அம்பேத்கர் – 1. சுயமரியாதை இயக்கம்

B) ஜோதிராவ் பூலே – 2. தர்ம பரிபாலன யோகம்

C) ஸ்ரீ நாராயணகுரு – 3. சத்ய சோதக் சமாஜ்

D) வைக்கம் வீரர் – 4. அகில பாரதீய தலித் வர்க்க சபை

A) 1 2 3 4

B) 2 1 4 3

**C) 4 3 2 1**

D) 3 2 1 4

**விளக்கம்:**

**A) அம்பேத்கர் – 1. அகில பாரதீய தலித் வர்க்க சபை**

**B) ஜோதிராவ் பூலே – 2. சத்ய சோதக் சமாஜ்**

**C) ஸ்ரீ நாராயணகுரு – 3. தர்ம பரிபாலன யோகம்**

**D) வைக்கம் வீரர் – 4. சுயமரியாதை இயக்கம்**

25. ஸ்ரீ நாராயணகுரு_____________மாநிலத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

A) மஹாராஸ்டிரா

**B) கேரளா**

C) தமிழ்நாடு

D) மேற்கு வங்காளம்